# கலிபோர்னியா 2020 பொதுத்தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது

ASIAN AMERICANS
ADVANCING JUSTICE
ASIAN LAW CAUCUS

## தயாராகுதல்

நீங்கள் ஏற்கனவே வாக்களிக்கப் பதிவு செய்திருந்தால், உங்கள் தகவல்கள் அனைத்தும் சரியாக உள்ளதா என்று உறுதி செய்ய, **voterstatus.sos.ca.gov** என்ற வலைத்தளத்திற்குச் செல்ல வேண்டும். உங்கள் முகவரி, மின்னஞ்சல் முகவரி போன்றவற்றை சோதித்து, மொழிபெயர்க்கப்பட்ட தேர்தல் பொருட்களைப் பெறவேண்டுமென்றால், அதனை குறிப்பிடவும்.

நீங்கள் பதிவு செய்திருக்கவில்லையென்றால், registertovote.ca.gov என்ற வலைத்தளத்தில் பதிவு செய்யலாம் அல்லது டி.எம்.வி (DMV), தபால் அலுவலகம், நூலகம் அல்லது உங்கள் மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
நீங்கள் கடைசித்தேதியைத் தவறவிட்டிருந்தால், தேர்தல் தினத்தன்று அல்லது தேர்தல் தினம் வரையிலும் பதிவு செய்யலாம்

## வீட்டிருந்து வாக்களித்தல்வாக்களித்தல்

நீங்கள் அக்டோபர் 19 தேதிக்குள்ளாகப் பதிவு செய்திருந்தால், தபால் வழியாக உங்கள் வாக்குச்சீட்டை பெறுவீர்கள்.
உங்கள் வாக்குச்சீட்டைப் பூர்த்தி செய்து, அதில் கையொப்பம், தேதியிட்டு, முத்திரை இடுவதை உறுதி செய்யவும்.
நீங்கள் இதனைத் **தபால் வழியாகத்** திருப்பியளிக்கலாம். தபால் முத்திரைத் தேவையில்லை! நவம்பர் 3 தேதியின் நாள் இறுதிக்குள்ளாக அது தபால் குறியிடப்பட்டதை உறுதி செய்யவும்.
நீங்கள் உங்கள் மாவட்ட தேர்தல் அலுவலகத்திலோ அல்லது ஏதேனும் வாக்குச்சாவடிகளிலோ அல்லது வாக்களிப்பு மையத்திலோ **சமர்ப்பிக்கலாம்**.
பெரும்பாலான மாவட்டங்களில் அக்டோபர் தொடக்கம் முதலே பாதுகாப்பான ட்ராப் பாக்ஸ் – களைக் கொண்டிருக்கும்.





## நேரடியாக வாக்களித்தல்

தேர்தல் நாள் **நவம்பர் 3, 2020 செவ்வாய்க்கிழமை**. வாக்குச்சாவடிகள் காலை 7 மணிமுதல் இரவு 8 மணிவரை திறந்திருக்கும்.
உங்கள் வாக்களிப்பு இடத்தை நீங்கள் இதில் பார்க்கலாம்: **sos.ca.gov/elections/polling-place**
**பெரும்பாலான மாவட்டங்கள் அக்டோபர் 31, 2020, சனிக்கிழமை முதலே நேரடி வாக்களித்தலையும் வழங்குகிறது,** மற்றும் சில இடங்களில் இன்னும் முன்னதாகவே நேரடி வாக்குப்பதிவு தொடங்கவுள்ளது. உங்கள் உள்ளூர் தேர்தல் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.
முன்னதாக தொடங்கும் வாக்களிப்பு இடங்கள் & டிராப்-பாக்ஸ்களை நீங்கள் இதில் பார்க்கலாம் : **caearlyvoting.sos.ca.gov**
கூடுமானவை செயல்முறையை எளிதாக்க, நீங்கள் தபால் மூலமாகப் பெற்ற உங்கள் வாக்குச்சீட்டை உங்களுடன் எடுத்துவரவும்.



55 Columbus Avenue, San Francisco, CA 94111 | T (415) 896-1701 | www.advancingjustice-alc.org